
Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


தனிப்பிரதி ரூ.10/-

மலர் - 27 இதழ் - 6 ஜுன் 2014



நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர்
உன்னோடு இருக்கிறார் என்றான்
(யோசுவா 1 : 9)

## புதிய வெளியீடு



மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில**
**குறும்பாடல்கள்**

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 1
2. ஏன் விசுவாசம் முக்கியம்? 9
3. பெண்கள் பகுதி 15
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 20
6. கிறிஸ்து என்னும் மார்க்கம் 22
7. வசன ரீதியான கிறிஸ்து.. 25
8. எதை எதிர்பார்க்கலாம் ? 28
9. ஆவிக்குரிய தன்மை ... 29
10. மூப்பர்களாக, உதவிக்கா .. 32


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 27 JUNE - 2014 Issue - 6**


ஆசிரியர் உரை

# நம்பிக்கையும், சந்தோஷமும், கீரிடமுமானவர்கள்

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் உபதேசங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் நற்செய்தி அதவாது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பிரசங்கிக்கப்பட்டத்தின் பயனாக ஆரம்பமான கிறிஸ்துவின் சபைகள் பல உண்டு. அச்சபைகளெல்லாம் எந்தெந்த ஊர்களில் அல்லது பட்டணங்களில் இருந்ததென்ற எல்லா விபரங் களும் நமக்கு தேவனால் வெளிப்படுத்திக் கொடுக்கப்பட வில்லை. இன்னும், அப்படி ஆரம்பமான எல்லாச் சபைகளுக்கும் தேவ ஆவி யினால் ஏவப்பட்ட மனிதர்களால் நிருபங்கள் எழுதப்பட்டதாகவும் தெரியவில்லை. ஆயினும், குறிப்பிட்ட பட்டணங்களில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்ட கிறிஸ்துவின் உபதேசங்களடங்கிய நிருபங்கள் இன்றைக்கு நம்மை ஆவிக்குரிய ரீதியில் கட்டுப்படுத்தக் கூடிய புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

முதல் நூற்றாண்டில், அப்போஸ்தலர்களின் உபதேசத்தால் கிறிஸ்துவின் சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களை நாம் ஆழ்ந்து படித்தால், அவைகள் அனைத்தும் ஒரே நோக்கில் எழுதப்பட வில்லை என்பதை அறிந்து கொள்ள முடியும். அந்தந்தச் சபையிலும் இருந்த விசுவாசிகளின் நிலையை மெச்சும் படியாகவும், சபை வாழ்வில் நிலவிய மந்த நிலையைப் போக்கும் படியாகவும், அவர்கள்

ஆவிக்குரிய ரீதியில் கொண்டிருந்த தவறான புரிந்து கொள்ளு தலுக்கு விளக்கமளிக்கும் படியாகவும், ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் யார் என்பதை அவர்களுக்கு உணர்த்தும்படியாகவும், இன்னும், கிறிஸ்தவ அறத்திற்குப் புறம்பான அவர்களின் மன நிலையைக் கண்டித்து எச்சரிக்கும்படியாகவும் எழுதப்பட்டுள்ளன என்பதை நாம் கவனிக்க முடியும்.

அப்படி மெச்சும்படியாக எழுதப்பட்ட நிருபங்களில் ஒன்று தான் தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபம். ரோமாபுரி, பிலிப்பு, கொலோசே போன்ற சபைகளுக்கு எழுதப்பட்டவைகளும் பாராட்டுக்கு உகந்தவைகளாக இருந்தாலும், தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபம் ஒருவகையில் தனித்து நிற்கத் தகுதியான தாகவே தெரிகிறது.

சரி, தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் வசனங்களைக் கொண்டு சில பாடங்களைக் கற்றுக் கொள்ளும் முன்பாக, நமது ஆசானின் வழக்கத்தின்படி இந்நூலின் பின்னணி பற்றி நாம் பார்த்து விடலாம்.

தெசலோனிக்கே பட்டணம், அன்றைக்கு இருந்த ரோம சாம்ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருந்த மக்கெதோனியாவின் தலைநகரப் பட்டணம். சுமார் இரண்டு லட்சம் மக்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். உலக சரித்திரத்தில் நீங்காத இடம் பெற்றுள்ள மகா அலெக்சாண்டர் தங்கையின் பேரால் இப்பட்டணம் அழைக்கப் பட்டதென்று வரலாறு கூறுகிறது. மூன்று நற்செய்திப் பயணங்களை வெற்றிகரமாக மேற்கொண்ட பவுலடியாரின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தின் போது இச்சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது (அப். 17:1,9). மூன்றே மூன்று வாரங்கள் மட்டுமே அப்பட்டணத்தில் தங்கி பவுலடியார் ஊழியம் செய்திருக்கிறார். அவ்வூழியத்தின் பயனாக யூதர்களில் சிலரும், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து பவுலையும், சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள் (அப். 17:4). எவ்வளவு வல்லமையான ஊழியம் பாருங்கள்! அதன்பிறகு, அந்த ஊழியம் தொடர முடியாமல் விசுவாசியாத யூதர்களின் கலகத்தால் வலுக் கட்டாயமாக பட்டணத்தை விட்டுப் பவுலும், சீலாவும் வெளி யேற்றப்பட்டார்கள் (17:10).

மிகக் குறுகிய காலம் மட்டுமே கிறிஸ்துவின் உபதேசங்களைக் கேட்ட இப்பட்டணத்தார், கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த தோடு, உபதேசத்துக்கடுத்த மற்றும் பக்திக்கடுத்த வாழ்வில் ஆச்சரியப்படத்தக்க மாற்றத்தையும் கொண்டு வந்தனர். இவர்களின் பக்திச் செயல்பாடு குறித்து ஆவியானவர் வெளிப்படுத்தும் அழகை இங்கே பாருங்கள். எப்படியெனில், உங்களிடத்திலிருந்து

கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும், அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக் குறித்து ஒன்றும் சொல்ல வேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று என்று (1தெச. 1:8). நாமும் தான் மாதக் கணக்கிலும், வருடக்கணக்கிலும் சத்தியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். என்ன பயன்? ஆவிக்குரிய செயல்பாட்டில் மாற்றமுமில்லை, பக்தி வாழ்வில் முன்னேற்றமுமில்லை.

இப்படி விசுவாச வாழ்க்கையில் பிரசித்திபெற்ற தெசலோனிக்கேயரை விட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட பிறகு, அவர்களை விரைவில் மீண்டும் காண முயற்சித்துக் கைகூடாமற் போன ஒரு சூழ்நிலையில் பவுலடியார் இந்நிருபத்தை எழுதியுள்ளார் (1 தெச. 2:18). கி.பி. 50களின் முற்பகுதியில், கொரிந்து பட்டணத்திலிருந்து எழுதப்பட்ட இந்நிருபம், பவுலடியாரால் எழுதப்பட்ட நிருபங்களில் முதல் நிருபமாக இருக்கக்கூடும் என்று நம்பப் படுகிறது. இந்நூலை எழுதுவதற்குக் குறைந்த மூன்று நோக்கங்கள் பவுலடியாருக்கு இருந்துள்ளது. (1) உபத்திரவங்களுக்கு மத்தியிலும் விசுவாசத்தில் உண்மையாகவும், உறுதியாகவும் இருப்பதைப் பாராட்டுவது (2) பரிசுத்த வாழ்வு சம்பந்தமாக மேலுமான அறிவுரைகள் வழங்குவது (3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவே தங்களில் மரித்துப்போன சிலருடைய நித்திய வாழ்வு பற்றி அவர்களுக்கிருந்த அச்சத்தைப் போக்குவது. இந்த மூன்றாவது காரணத்தினிமித்தம் தான், தெசலோனிக்கேயருக்கு எழுதின முதல் நிருபத்திலுள்ள 5 அதிகாரத்தையும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு சம்பந்தப்படுத்தி முடித்திருக்கிறார். 1தெச. 1:10; 1 தெச. 2:19; 1 தெச. 3:13; 1 தெச. 4::16; 1 தெச. 5:23; புதிய ஏற்பாட்டிலுள்ள வேறு எந்த நூலுக்கும் இச்சிறப்பு கிடையாது.

இது இல்லாமல் இச்சபையாருக்கு வேறொரு தனிச்சிறப்பும் உண்டு. ஆம், நிருபத்தின் ஆரம்பத்திலேயே இவர்கள், " தேவனுக்குப் பிரியமான சகோதரரே " என்று அலங்கரிக்கப்பட்டுள்ளார்கள். "பிரியம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் தேவ மனிதர்களால் வேறு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவைகள் தனி மனிதர்களுக்காகப் பயன்படுத்தப்பட ஆவியானவர் அனுமதித்திருக்கிறாரே தவிர, ஒரு சபைக்காகப் பயன்படுத்தப்பட அனுமதிக்கவில்லை. மேலும், அவர்களெல்லாரும் தேவதாசர்களுக்குப் பிரியமானவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறார்களேயொழிய (1 தீமோ. 1:2; பிலிப். 2:12; III யோவான் 2, ரோமர் 15:8,9; 2 பேதுரு 3:15) தேவனுக்குப் பிரியமானவர்கள் என்று அலங்கரிக்கப் படவில்லை. தேவனுக்குப் பிரியமானவர்கள் என்பது பழைய ஏற்பாட்டில் தானியேலுக்கும் (தானி. 9:23), புதிய ஏற்பாட்டில் இயேசு ஆண்டவருக்கும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே சொற்றொடர் தான் தெசலோனிக்கேயருக்கும் பயன்படுத்த

தேவ ஆவியானவர் ஏவியிருக்கிறார். அப்படியானால், இந்தத் தெசலோனிக்கேயர் உன்னதமான கிறிஸ்தவர்கள் என்பதற்கு வெறென்ன சான்று வேண்டும்?

இவர்களுக்கு எழுதும்போது தான் பவுலடியார் இவ்விதம் குறிப்பிடுகிறார். " *எங்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள். நீங்களே எங்களுக்கு மகிமையும், சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்* " என்று (1 தெச. 2:19,20). வசனம் 20-ல், " இருக்கிறீர்கள் " என்றும், வசனம் 19-ல், " இருப்பீர்கள் " என்னும் வார்த்தைகள் இருப்பதை நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது. இப்பொழுதும் பக்தி வாழ்வில் தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவின் வருகையிலும் தேர்ந்தவர்களாகவே இருக்கப் போகிறார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் இவர்களின் கிறிஸ்தவ வாழ்க்கை குறித்து சாட்சி பகர்கிறார். அப்பப்பா, தலையே சுத்துது! இது, எப்படி இவர்களால் அப்படி இருக்க முடிந்தது என்ற கேள்வியை நமக்குள் எழுப்புவதோடு, நம்மால் அவர்களைப் போல் இருக்க முடியவில்லையே என்று வெட்கப்படவும் வைக்கிறது. தெசலோனிக் கேயரைப் போல் நாமெல்லாரும் எப்பொழுது மாறப்போகிறோம்? ஆத்தும பரிசோதனை செய்வோம்.

தெசலோனிக்கேயரின் மேம்பட்ட கிறிஸ்தவ வாழ்வுக்கான காரணங்கள் பல இருந்தாலும் , அவைகளுள் ஒரு மூன்றை மாத்திரம் உங்களோடு இம்மாதம் பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன். அதிலிருந்து நாம் நமக்கான பாடங்களைக் கற்றுக்கொள்வோம். சரியா?

## I. உபத்திரவங்களுக்கு மத்தியில் திருவசனத்தை ஏற்றுக்கொண்டார்கள்

தெசலோனிக்கே சபையார் அப்போஸ்தலர்களுக்கு நம்பிக்கை யும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமாயிருக்க முடிந்ததற்கான காரணங்களில் முதலாவதாக, உபத்திரவங்களுக்கு மத்தியில் அவர்கள் திருவசனத்தை ஏற்றுக்கொண்டதை நாம் கூறலாம்.

பொதுவாக, பாடுகளும்,உபத்திரவமும் கிறிஸ்தவத்திற்கு அப்பாற்பட்டது என்று தான் நம்முடைய நாட்களில் பிரசங்கிக்கப்படு கிறது. "இயேசுவண்டை வா" உன் சரீரப்பிரச்சனைகள் அனைத்தும் மாயமாய் மறைந்து போகும் என்றே கூவிக் கூவி பிரசங்கிக்கிறார்கள். இது இயேசு ஆண்டவரின் உபதேச பாணிக்கும், அப்போஸ்தலரின் பிரசங்க முறைக்கும் முற்றிலும் எதிரானது. தெசலோனிக்கேயருக் கான பவுலடியாரின் பிரசங்கமே இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. வசனத்தை கவனியுங்கள் "*கிறிஸ்து பாடு படவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும் நான் உங்களுக்கு அறிவிக்கிற*

*இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து திருஷ்டப்படுத்தி னான்* " (அப். 17:3) இதன் மூலம், பாவம் அறியாத கிறிஸ்து அவர் களின் பாவங்களினிமித்தம் அவமானப்படுத்தப்பட்டு , அடிக்கப் பட்டு, இரத்தம் சிந்தப்பட்டு , சிலுவையில் தூக்கப்பட்டார் என்பதை அவர்களுடைய ஆவிக்குரிய கண்களுக்கு முன்பாக தத்ரூபமாகக் கொண்டு வந்து நிறுத்தினார். சரீர நன்மைகளுக்கான எவ்வித வாக்குத் தத்தமும், உத்திரவாதமும் இவர்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆயினும், எங்களுக்காக மரித்த இயேசுவுக்காக நாங்கள் எங்களை ஒப்புக்கொடுக்கிறோம் என்பதே இவர்கள் முடிவாக இருந்துள்ளது. இவர்கள் பக்திப் பிரவேசமே அக்கினிப் பிரவேசம். ஆகவே தான், கிறிஸ்தவ வாழ்வில் இவர்கள் எதிர் கொண்ட பாடுகள் எதுவும் இவர் களை அசைக்க முடியவில்லை.

இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுகொண்ட அந்நாளில் தானே பட்டணமே அதிர்ந்து போகத்தக்கதான ஒரு கலகச் சூழல் உருவானது. தேவ ஊழியர்களுக்கு எதிராக பொய்யான குற்றம் சாட்டப்பட்டது. பவுல் மற்றும் சீலாவின் உயிருக்கே ஆபத்து வந்தது (அப். 17:5-10). ஆனால், எதுவும் இவர்கள் விசுவாசத்தைப் பதம் பார்க்கவில்லை. சொக்கத் தங்கங்களாகவே தொடர்ந்து விசுவாசத்தில் விளங்கினார்கள். அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயி ருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2 தீமோ. 3:12) என்கிற கிறிஸ்தவ நெறியின் இரகசியம் அது போதிக்கப்படுவதற்கு முன்பே இவர்களுக்குப் புரிந்திருக்கிறது.

ஆனால், அருமையானவர்களே, நம்முடைய நாட்களின் நிலை எப்படியுள்ளது? கிறிஸ்துவுக்குள்ளாக மற்றும் கிறிஸ்தவத்திற் குள்ளாக வருகிறவர்களால் ஏன் தெசலோனிக்கேயரைப் போல் இறுதி வரை உறுதியாய் நிற்கமுடிவதில்லை? எங்கே தவறு நடக்கிற தென்று ஏதாவது விளங்குகிறதா? விளங்கியாக வேண்டும். கிறிஸ்து வை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் சரியான முறையில் காட்டப்பட வேண்டியது அவசியம். பவுலடியாரின் வெற்றிகரமான ஊழியத்திற்கான இரகசியம் இவ்வுண்மையைச் சரியாகப் புரிந்து வைத்திருந்தது தான். ஆகவே தான், நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என்று (1 கொரி. 1:23) கொரிந்தியருக்கு எழுதினார். நம்முடைய நாட்களில் இப்பேருண்மை கிறிஸ்தவ ஊழியர்களால் இருட்டடிப்பு செய்யப் பட்டிருக்கிறது. இயேசு ஆண்டவர் சரீர நன்மைகளைக் கொடுக் கும்படி இப்பூமிக்கு வந்தவராக சித்தரிக்கப்படுகிறார். இப்பொய்யை நம்பி வருபவர்களால் இடறல்கள் வரும்போது நிற்க முடியவில்லை. சோதனைகள் வரும் போது தாக்குப்பிடிக்க முடிவதில்லை. சவால்கள் வரும்போது எதிர்கொள்ள முடியாமல் எதிராளியிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழி தெரிவதில்லை. விளைவு? தண்ணீரற்ற மேகங்களைப் போல் அடித்துச் செல்லப்பட்டு

காணாமல் போய் விடுகிறார்கள். ஆகவே, மனுக்குல மீட்பிற்காகப் பாடுகள் பட்ட மற்றும் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை உலகிற்கு உயர்த்திக் காட்டி, தெசலோனிக்கேயர் போன்ற உண்மையும், உறுதியும் உள்ள மெய்ப்பக்தியாளர்களை கிறிஸ்துவுக்காக வென்றெடுப்போம்.

## II. இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்

தெசலோனிக்கேயர் சபையார் அப்போஸ்தலர்களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருக்க முடிந்ததற்கான இரண்டாவது காரணமாக, கிறிஸ்துவின் வருகைக்கான அவர்கள் எதிர்பார்ப்பை நாம் கூறலாம்.

வேத வசனங்களின்படியான கிறிஸ்தவர்களும், பொத்தாம் பொதுவில் தங்களையும் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ள விரும்புபவர்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பூரண நம்பிக்கையுடையவர்களாய் இருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், இதோ சீக்கிரமாய் வருகிறேன், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் (வெளி. 22:7,20) என்று வெளிப்படுத்தப் பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தை எதுவும் ஒரு போதும் பொய்யாகாது. ஆயினும், முதல் நூற்றாண்டுக் காலத்தில் அவருடைய வார்த்தைகளை கிறிஸ்தவர்களாக இருந்த ஒருசாரார் நம்பாதது போல (2 பேதுரு 3:4,9) இன்றைக்கும் அநேகர் நம்ப மறுக்கிறார்கள். ஆனால், தெசலோனிக்கேயரோ பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்துவின் சபையார் அவர் வருகையை நாளும் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அவர்களின் இந்த எதிர்பார்ப்பு குறித்து பவுலடியார் குறிப்பிடுவதைப் பாருங்கள். " *அவர்கள் மரித்தோரிலிருந்தெழுப்பின வரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்களே* " (1 தெச 1:10). பவுலடியாருக்குள்ளும் இதேவிதமான எதிர்பார்ப்பு இருந்ததை பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறார் (பிலி. 3:20) என்று.

தெசலோனிக்கேயர் பட்டணத்து சபையார் நம்பிக்கையும், சந்தோஷமும், கிரீடமுமாயிருந்ததற்கான இரகசியம் இப்போது புரிகிறதா? இன்றைய கிறிஸ்தவர்களாலும், கிறிஸ்தவ சமுதாயத்தாலும் ஏன் அப்படி இருக்க முடியவில்லை என்பதற்கான காரணம் விளங்குகிறதா? தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற பெரும்பாலோருக்குக் கிறிஸ்தவம் இம்மைக்கான மார்க்கமா அல்லது மறுமைக்கான மார்க்கமா என்பதிலேயே தெளிவு

இல்லை. மறுமையின் நித்திய வாழ்வு பற்றிய முழு நம்பிக்கை ஒருவருக்கும் இல்லாவிட்டால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய எதிர்பார்ப்பு எங்ஙனம் இருக்க முடியும்? கிறிஸ்துவின் வருகை பற்றிய அறிவும், எதிர் பார்ப்பும் இல்லாமல் போகுமானால் அதற்கான பக்திச் செயல்பாடு எங்கிருந்து வரும்? பிரச்சினை எங்கே இருக்கிற தென்று உறைக்கிறதா, இல்லையா? தெசலோனிக்கேயரிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளுவோம்!.

### III. தேவனுக்குப் பாத்திரராய் நடந்து கொண்டார்கள்

தெசலோனிக்கே பட்டணத்து சபையார் அப்போஸ்தலர் களுக்கு நம்பிக்கையும், சந்தோஷமும், மகிழ்ச்சியின் கிரீடமுமா யிருக்க முடிந்ததற்கான இன்னுமொரு காரணமாக, அவர்கள் தேவனுக்குப் பாத்திரராய் நடந்து கொண்டதைக் கூறலாம்.

இங்கே " பாத்திரம் " என்பது " தகுதி " என்று பொருள்படும். அப்போஸ்தலன் பவுல் எபேசியருக்கு எழுதும்போது இதே கருத்தை வலியுறுத்தியுள்ளார். " ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவ னாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று (எபே. 4:1). தெசலோனிக்கேயர் பாத்திரராய் நடந்து கொள்வதற்கு ஏதுவாக, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேவ ஆலோசனைக்குக் கட்டுப்பட்டு நடந்திருக்கிறார்கள். மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும், தேறுதலும், எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள் " (1 தெச. 2:11,12).

இவ்வசனப்பகுதியில், அவர்கள் பாத்திரராய் நடப்பதற்கு மூன்று முக்கியமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் கவனித்தாக வேண்டும். 1. புத்தி 2. தேறுதல் 3. எச்சரிப்பு. இந்த மூன்றும் அவர்கள் பக்தி வாழ்க்கையில் ஒருங்கே கிடைத்திருக்கிறது. சரீரப்பிரகாரமான ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளை வளர்ப்பது போல, பவுலடியார் ஓர் ஆவிக்குரிய தகப்பனாக இருந்து பக்தி வாழ்க்கையில் மேம்படப் பாடுபட்டிருக்கிறார். இங்கே "புத்தி" என்பது அறியாததை அறிந்து கொள்ளச் சொல்லப்படும் வார்த்தைகள் மாத்திர மல்ல. மாறாக, அறிந்திருப்பதில் சிறந்து விளங்கக் கொடுக்கப்படும் ஊக்கம். அப்போஸ்தலர் பவுலடியாரும், பர்னபாவும் அந்தியோகியா விலே இதைத்தான் செய்திருக்கிறார்கள். " *சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனு டைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்* " (அப். 14:22).

" தேறுதல் " என்பது ஒரு தகப்பனிடமிருந்து பிள்ளைக்குக் கிடைக்கக் கூடியது. பரலோகத்தின் தேவன் " சகலவிதமான ஆறுதலில் தேவன் " என்றே கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறார் (2 கொரி. 1:3). " சோர்ந்து போன ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் " என்றே தேவன் கட்டளை கொடுத்திருக் கிறார். (ஏசா. 40:1). அதைத்தான் பவுலடியாருடைய பக்திப் பாதை யில் தெசலோனிக்கேயருக்குச் செய்திருக்கிறார்.

மூன்றாவதாக, அவர் கொடுத்திருக்கிற எச்சரிப்புதான் மிக முக்கியமானது. இது, பல சரீரத் தகப்பன்மார்களும், ஆவிக்குரிய தகப்பன்மார்களும் செய்யத் தவறுவது. நோவாவைக் குறித்துப் பரலோகத்தின் தேவன் சொல்லும்போது, " தன் காலத்தில் இருந்தவர் களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் " (ஆதி. 6:9) என்று கூறுகிறார். ஆனால், இப்படிப்பட்ட நேவாவாவுக்கே எச்சரிப்பு ஒரு கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாக எபிரெயரில் நாம் வாசிக்க முடியும். " *விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவை களைக் குறித்து தேவ எச்சரிப்பு பெற்று, பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்...*" (எபி. 11:7) என்று.

அருமையானவர்களே! நம்முடைய நாட்களில் எச்சரிப்பு என்பது அருகிப்போன ஒன்றாகவே உள்ளது. சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியிலும் இதுதான் யதார்த்தமாக உள்ளது. குடும்பங் களின் சீரழிவுக்கும், பக்தி வாழ்வின் சீர்கேடுகளுக்கும் இது தான் அடிப்படை. எச்சரிக்க வேண்டியவர்கள் எச்சரிக்கப் பயப்படுகிறார்கள். எச்சரிக்கப்பட வேண்டியவர்கள் எச்சரிப்பை அற்பமாக எண்ணி ஏற்க மறுக்கிறார்கள். விளைவு? வேறென்ன, நித்திய அழிவுதான். தெசலோனிக்கேயர் நித்திய அழிவுக்குத் தப்பித் தேவனுடைய பார்வையில் தேறினவர்களாகவும், அப்போஸ்தலர்களுக்கு நம்பிக்கையாகவும், மகிழ்ச்சியாகவும், கிரீடமாகவும் இருந்ததற்குக் காரணம் அவர்கள் தேவ மனிதர்களின் எச்சரிப்பை ஏற்றுக்கொண்டது தான்.

ஆகையால், இந்த உண்மைகளை உணர்ந்து, தெசலோனிக்கே சபையாரைப் போன்ற பக்திச் செயல்பாட்டை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் எல்லா நிலைகளிலும் வெளிப்படுத்தி, மறுமையை தேவாதி தேவனோடு கழிக்கத் தீர்மானிப்போம். நாம் இருக்கும் இடங்களில், நம்மை உண்மையாய் வழிநடத்தும், உண்மையாய் போதிக்கும் தேவ மனிதர்களுக்கு நம்பிக்கையாகவும், சந்தோஷ மாகவும், கிரீடமாகவும் இருப்போம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!



# ஏன் விசுவாசம் முக்கியமானது?

Bro. J.C. சோட்

விசுவாசம் என்றால் என்ன? அதை விளக்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா? இதற்கான விளக்கத்திற்கு பெரும்பாலும் எபிரெயர் 11:1க்கு நாம் செல்கிறோம். அங்கே அதன் எழுத்தாளர் இப்படியாகச் சொல்கிறார், “*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது*” என்று. இதை உதாரணத்துடன் விளக்குவதற்கு மாபெரும் மனிதர்களாகிய ஆபிரகாம், மோசே, தாவீது, எலிசா இன்னும் பலர் வாழ்ந்திருக் கிறார்கள். நான் அவர்களைப் பார்த்ததில்லை. ஆனால், அவர்கள் வாழ்ந்ததற்கான உண்மைகளும், ஆதாரங்களும் ஏராளமாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தை சந்தேகப்பட எனக்கு எவ்வித காரணமும் இல்லை. ஆகையால், இது போன்ற சாட்சியங்களை ஏற்றுக் கொள்கிறேன். மேலும், வேத வாக்கியங்களின் மீது எனக்கு இருக்கிற நம்பிக்கையை அடிப்படை யாக வைத்து, மேற் கூறப்பட்ட மனிதர்கள் வாழ்ந்தார்கள் என விசுவாசிக்கிறேன். அதுபோலவே, கிறிஸ்து, பவுல், பேதுரு மற்றும் பலர் முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என விசுவாசிக் கிறேன். இந்தக் காரியத்தில் பவுல் எழுதினது சரியாகத் தோன்றுகிறது. “ *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனு டைய வசனத்தினாலே வரும்* ” (ரோமர் 10:17).

நான் முகமுகமாகப் பார்த்திராத உலகத்தின் மாபெரும் தலைவர்கள் இருக்கிறார்கள்; ஆனால், அவர்கள் இருக்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் இருப்பதை நான் விசுவாசிக்க சில குறிப்பிட்ட ஆதாரங்கள் என்னை வழி நடத்துகின்றன. அவர்களைப் பற்றிய அறிக்கைகளும், படங்களும் செய்தித்தாள்களில் வருகின்றன. அவர்களை தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறேன், ரேடியோ ஒலிபரப்புகளில் அவர்களுடைய குரலைக் கேட்டிருக்கிறேன். நம்பத் தகுந்த ஆதாரங்களிலிருந்து கிடைத்த இந்த நிரூபணங்கள், சாட்சியங்கள் போன்றவைகளினால் இந்த உலகத்தலைவர்கள் உண்மையானவர்கள் என்று விசுவாசிக்கிறேன்.

அது போலவே, நான் தேவனைப் பார்த்ததில்லை. ஆனால், தேவனை அப்படிப் பார்க்காமலிருப்பது நான் மட்டுமல்ல; யோவான்

சொல்லும் போது, "*தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்* " என்றார். (1யோவான் 4:12). நான் தேவனை பார்த்திராவிட்டாலும் கூட, அவர் இருக்கிறார் என்று இன்றும் விசுவாசிக்கிறேன் ஏன்? அவர் உண்மையானவர் என்பதை நிரூபிக்க அநேக ஆதாரங்கள் இருக்கிறது. எல்லா சிருஷ்டிப்பும் இருக்கிறது (ஆதி. 1:1) பொய்யு ரையாத வேதாகமம் அவர் பற்றிச் சொல்கிறது (II தீமோத். 3:16,17). அவர் நமக்கு எவ்வளவு தேவை என்பதையும் வேதாகமம் போதிக் கிறது (எரே. 10:23). எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொன்னார். "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்* " (எபி. 11:6).

நாம் குருட்டு விசுவாசம் அல்லது வீணான விசுவாசத்தை உடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக; நாம் கர்த்தரையும், அவருடைய சித்தத்தையும் நன்றாய் அறிந்து கொள்ளும்படியாக அவர் நம்மிடம் பேசியிருக்கிறார். தேவன் தம்முடைய குமாரன் மூலமாக நம்மிடம் பேசுகிறார். கிறிஸ்து மறுரூபமானபோ, வானத்தி லிருந்து இப்படியாக தேவன் பேசினார். " *இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டா யிற்று*" (மத்தேயு 17:5). எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, " *பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்* " (எபி. 1:1,2). ஆனால், தேவன் நம்மிடம் எப்படியாகப் பேசுகிறார்? கிறிஸ்துவின் மூலமாகவும், அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும் பேசுகிறார்; கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தைத்தான் யாக்கோபு சுயாதீனப் பிரமாணம் என்று சொல்கிறார் (யாக்கோபு 1:25). பவுல் சொல்லும் போது, "*வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதே சத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது* " (II தீமோ. 3:16,17) என்று கூறியுள்ளார்.

பேதுரு அப்போஸ்தலன் இப்படியாகச் சொல்லியுள்ளார். "*வேதாகமத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிரென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.*

*தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் "* (II பேதுரு 1:20,21). வேறொரு சந்தர்ப்பத்தில் பேதுரு இப்படியாகச் சொன்னார். *" அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே "* (I பேதுரு 1:23-25).

கர்த்தருடைய வார்த்தை நமக்கு எழுத்து வடிவத்தில் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை வாசித்து, படித்து, தேவன் இன்று நம்மிடமிருந்து என்ன எதிர்பார்கிறார் என அறிந்து கொள்வது உங்கள் கையில் தான் இருக்கிறது. நாம் படிக்க வேண்டும் என்று சொல்கிறார் (II தீமோ. 2:15) வேத வாக்கியங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று இயேசு தாமே சொல்லியிருக்கிறார் (யோவான் 5:39). ஆனால், நாம் ஏன் தேவனுடைய வார்த்தையை வாசித்துப் படிக்க வேண்டும்? மறுபடியும், தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வதற்கும், அவர் சொல்லியிருக்கிறதை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிவதற்கும் நாம் வசனங்களைப் படிக்க வேண்டும்.

தேவன் இருக்கிறார் என்பது உண்மையாக இருந்தாலும், அவர் நமக்காகத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருந் தாலும் கூட, நாம் இரண்டு காரணங்களால் இன்னும் இழந்து போனவர்களாக இருக்க போக முடியும். முதலாவது, அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பற்றி கவலைப்படாமல் தேவனை விசுவாசிக்க மறுப்பதன் மூலம். இரண்டாவது, மனரீதியாக, ஒருவர் தேவன் இருக்கிறார், கிறிஸ்து அவருடைய குமாரன், வேதாகமம் அவருடைய வார்த்தைகளை உள்ளடக்கியது என ஏற்றுக் கொண்டு கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலம். விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்கிறது என்கின்ற உபதேசத்துக்கு ஆதரவாக இந்த உலகத்தில் அநேகர் உள்ளனர். அவர்கள் விசுவாசம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள (யோவான் 3:16) ம் வசனத்தை சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், இங்கே கேள்வி இதுதான்; நாம் உண்மை யிலேயே கர்த்தரில் விசுவாசம் வைத்தால் நாம் என்ன செய்யும் படியாக அவர் கேட்டுக் கொண்டிருக்கிறாரோ அதைச் செய்யமாட் டோமா? அவருடைய உபதேசத்துக்கு கீழ்ப்படிய நாம் தவறினால் அவர் பிரியப்படுகிற விசுவாசத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

யாக்கோபு விசுவாசத்தின் முக்கியத்துவத்தை இவ்விதமாக விவாதிக்கிறார். " *என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண் டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது உங்க ளில் ஒருவன் அவர்களை நோக்கி; நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டிய வைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்தாயிருக்கும். ஒருவன் உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியை களினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண் டென்று விசுவாசிக்கிறாய் அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. வீணான மனுஷனே கிரியைக ளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலி பீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான். விசுவாசம் அவனுடைய கிரியைகளோ டேகூட முயற்சி செய்து கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்ட தென்று காண்கிறாயே; அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித் தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென் னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திர மல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர் களை ஏற்றுக்கொண்டு வேறு வழியாய் அனுப்பிவிட்ட போது கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? அப்படியே, ஆவியில் லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது* " (யாக்கோபு. 2:14-26). இங்கே யாக்கோபு ஆசிரியர் கூறுவது போல், விசுவாசம் உண்டென்று கூறுவது ஒன்று. அப்படி விசுவாசமிருக்கிறதென்ப தை நிரூபிப்பது மற்றொன்று. விசுவாசம் மாத்திரம் என்ன செய்ய முடியும்? அதற்கு என்ன மதிப்பு உண்டு? அது செத்த விசுவாசமே. ஆனால், உயிருள்ள விசுவாசம், செயல்படும் விசுவாசம் மற்றும் கிரியை நடப்பிக்கும் விசுவாசம்.

இங்கே, விசுவாசம் கிரியை உடையதாக இருந்தால், இரட்சிப்பு கிருபையினால் வரவில்லை என்று பொருள்பட்டு விடுமா? பவுல்

இதுபற்றி இப்படிச் சொல்கிறார். *"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல "* என்று (எபே. 2:8,9). நிச்சய மாகவே, மனிதனால் போதுமான அளவு நற்கிரியைகள் செய்து, அதனடிப்படையில் இரட்சிக்கப்பட்டு, பரலோகம் செல்ல முடியாது. அதுபோலவே, மனிதன் மோசேயின் பிரமாணத்தை கைக் கொள்வதி னாலும் இரட்சிப்படைய முடியாது. இங்கே, அநேகர் ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஒரு கருத்தை பவுல் சொல்கிறார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று. அப்படியானால் அதன் பொருள் என்ன? அதன் பொருள், கிருபை தேவனை அடையாளப்படுத்துகிறது, விசுவாசம் மனிதனை அடையாளப்படுத்துகிறது. தேவன் தம்முடைய கிருபையினாலே இரட்சிப்பை நமக்கு அளிக்கிறார், அந்த இரட்சிப்பை தன்னுடைய விசுவாசத்தைக் கொண்டு ஏற்றுக்கொள்வது மனிதனுடைய கையில்தான் இருக்கிறது. தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால், நாம் இரட்சிப்படையமுடியாது. மாறாக, தேவன் அதைத் தரும் போது நாம் அதை ஏற்றுக் கொண்டால், அவர் நம்மை இரட்சிக்கிறார். ஆனால், நாம் எப்படி அதை ஏற்றுக் கொள்கிறோம்? அவர் சொன்னதை விசுவாசிப்பதினாலும், நாம் என்ன செய்யும்படியாக சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்வதி னாலும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், நாம் நம்முடைய பங்காக எதையாவது செய்தால், இரட்சிப்பு கிருபையினால் அல்ல என்று பொருள்பட்டு விடுமா? இல்லை, அப்படி இல்லை. எங்களுடைய இரட்சிப்பை நாங்கள் சம்பாதித்து விட்டோம் என்று சொல்லத்தக்க ரீதியில், நாம் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படிய முடியாது.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு சென்று அதை வாசிக்கும் போது, வித்தியாசப்பட்ட மனமாற்ற சம்பவங்கள் அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறதைக் காண முடியும். ஒவ்வொரு சம்பவத்திலும் சுவிசேஷம் அல்லது கர்த்தருடைய சித்தமானது, இரட்சிப்பு தேவைப்படும்படியான நிலையிலிருந்தவர்களுக்கு போதிக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தையை கேட்டதின் விளைவாக அவர்கள் விசுவாசிகளானார்கள். ஆனால், அப்படிக் கேட்ட போது அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. மாறாக, அவர்களு டைய விசுவாசத்தை அடிப்படையாக வைத்து அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற்றதினால் இரட்சிப்படைந்தார்கள். இதை அவர்கள்

செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். குறிப்பாக, (அப்போஸ்தலர். 2,8,9,10 மற்றும் 16 அதிகாரங்களை வாசியுங்கள்). அங்கே விசுவாசத்தினால் மாத்திரம் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்க முடியுமா? இல்லை, அப்படி ஒருவரும் இரட்சிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை. அவர்களுடைய விசுவாசம் அவர்களை கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஏவும் அளவுக்கு உறுதியாக இருந்தபடியால் தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். இது இன்றும் உண்மையாயிருக்கிறது. ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). ஒருவேளை ஒருவர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற மனதில்லாதவராக இருந்தால் அவர் இரட்சிக்கப்பட முடியுமா? (மாற்கு. 16:16-ன் படி) அப்படி முடியவே முடியாது. இந்தக் காரியத்தில் அவர் அவிசுவாசியாகத்தான் கருதப்படுவார். ஒருவர் விசுவாசிக்கவில்லையென்றால் அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார். நாம் கர்த்தரை விசுவாசிக்கும் போது, நமக்கு இரட்சிக்கும் விசுவாசம் இருக்கிறபடியால் ஒவ்வொரு காலத்திலும் அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்வோம்.

உங்களிடத்தில் எவ்வகையான விசுவாசம் இருக்கிறது? உங்கள் விசுவாசம் கிரியை செய்கிற விசுவாசமா? உங்கள் விசுவாசத்தின்படி செயல்பட விருப்பமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார்.

## தேவனுடைய ராஜ்யத்தின் தன்மைகள்

1. தேவனுடைய ராஜ்யம் தெய்வீக ஆரம்பத்தை உடையது. அதனால் ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை (தானியேல் 2:44).
2. தேவனுடைய ராஜ்யம் உலகெங்கிலும் வியாபித்திருக்கிறது, தேவனுடைய பிள்ளைகள் அதன் பிரஜைகளாயிருக்கிறார்கள் (கொலோ. 1:13,14).
3. தேவனுடைய ராஜ்யத்தில் கிறிஸ்துவே சகல அதிகாரத்தையும் உடையவராயிருக்கிறார் (மத். 28:18).
4. தேவனுடைய ராஜ்யம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை இப்பூமியில் நிலைத்திருந்து, அதன்பின்பு அவரால் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் (1 கொரி. 5:24).

பெண்கள் பகுதி

# "தேவனுடைய பெண்கள் தேவ சித்தத்தை மதிப்பார்கள்"

சகோ. ரேச்சல் நாயகம்

**நீ**திமொழிகள் 31ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட குணசாலியான ஸ்திரீ எவ்வளவு அதிகமாக நினைக்கப்படுகிறாள், எப்படிப் பாராட்டப்படுகிறாள் என்பது நமக்குத் தெரியும். அந்த ஸ்திரீயினுடைய தொலைநோக்கு, சுறுசுறுப்பு, நற்பண்பு போன்றவைகள் வெளிக் கொணரப்பட்டிருக்கின்றன. ஆனால், அனைத்து குணங்களுக்கும் திறவுகோலாய் விளங்குகிறது 30ம் வசனம். சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண். "கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்". இங்கு தான் உண்மையான குணசாலி ஸ்திரீ காணப்படுகிறாள். அவள் கர்த்தருக்குப் பயப்படுபவள். நம் தலைப்பின்படி பார்த்தால் கர்த்தருடைய சித்தத்தை மதிப்பவள். ஆக இந்த ஸ்திரீ எவ்வாறு எந்தெந்த வகைகளில் தேவ சித்தத்தை மதித்து ஏற்றுக் கொள்கிறாள் என்று பார்ப்போம்.

**முதலாவது**, தேவ சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிகிறாள். உண்மையான மனமாற்றத்தை பெற்றவளாயிருக்கிறாள். விசுவாசித்து நடக்கிறாள். நீதியை தன் சால்வையாக உடுத்துகிறாள். வேதாகமத்தில் காணப்படும் தேவ பக்தியுள்ள ஸ்திரீகளை உதாரணமாக வைத்துக் கொண்டு தன் வாழ்க்கையை நடத்துகிறாள் (1பேதுரு 3:5). தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற் கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் (1 தீமோத். 2:10) என்ற வசனத்தின்படி வாழ்கிற ஸ்திரீயே தேவ சித்தத்தை மதித்து நடக்கிற ஸ்திரீயாக கருதப்படுவாள். வேதாகமத்தை அப்படியே தன் வாழ்க்கையில் பிரதிபலிக்கும் பெண்களாக நாம் இருக்க வேண்டும். தேவனுடைய பெண்கள் முதலில் தேவ சித்தத்தை மதித்து தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுகிறார்கள்.

**இரண்டாவதாக**, தேவ சித்தத்தை அஸ்திபாரமாகக் கொண்டு அதன்மேல் அவள் நிற்கிறாள். யோவான் ஸ்நானகன் நல்ல தகப்பனையும், தாயையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவனாய் இருந்தான். அவர்களைப் பற்றிக் கூறும்போது, "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும், நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" (லூக். 1:6) என்று பார்க்கிறோம். தேவ சித்தத்தின் மீது நின்றார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்தி

கூறும்போது பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் (2 தீமோ. 3:15) என்றும், அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைந்திருந்தது (1 தீமோ. 1:5) என்றும் கூறுகிறார். இந்த இளைஞனின் குடும்பத்தில் இருந்த பெண்கள் தேவனுடைய வார்த்தையை கற்றுத் தேர்ந்து அதில் நிலைத்திருந்தார்கள். அதிலிருந்து அசையாதவர்களாயிருந்தார்கள். ஒரு ஸ்திரீயினுடைய நிலையான விசுவாசம் அநேக ஸ்திரீகளுக்கு உதாரணமாக இருப்பது மிகவும் மெச்சப்படத்தக்க ஒன்று. எந்த ஒரு சக்தியும் தங்களுடைய விசுவாசத்தையும், தேவனுடைய வார்த்தையின்மேல் உள்ள உறுதிப்பாட்டையும் அசைத்து விட அவர்கள் அனுமதிக்கவேயில்லை. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளினால் இழப்புண்டு திரிகிற சில பெண்களை சாத்தான் வயப்படுத்தி சபைகளில் பிரச்சனைகளை கொண்டு வருகிறான் என்று (2 தீமோ. 3:6) பவுல் கூறுகிறார். எல்லா காரியத்திலும் ஒரு நிலைத்த தன்மை இல்லாமல் தாங்களும் கெட்டு பிறரையும் கெடுக்கும் சிலர் இருக்கவே செய்கிறார்கள். தேவனுடைய பெண்கள் ஒரு போதும் இவ்வளவு இழிநிலைக்குச் செல்லமாட்டார்கள். அவர்கள் நிற்பார்கள்.

**மூன்றாவதாக,** தேவ சித்தம் அவளுக்கு போதுமானதாயிருக்கும். வேத வாக்கியங்கள் எல்லாவற்றிற்கும் போதுமானதாயிருக்கிறது என்பதை தேவனுடைய பெண்கள் விசுவாசிக்கிறார்கள். மேலும், எல்லாவற்றிற்கும் பிரயோஜனமானது (2 தீமோ. 3:16,17) என்பதை ஏற்று வாழப் பழகிக் கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்திரீகள் தங்கள் குடும்பத்துக்கும், சபைக்கும் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெண்கள் சபைகளில் செயல்படும் பெண்களாக மற்றவர்களும் செயல்பட இவர்கள் ஆதாரமாய் இருக்கிறார்கள். மேலும், தன் கணவன், பிள்ளைகள் இவர்களும் வேத வசனங்கள் தங்களுக்கு போதுமானது என்று எண்ணும்படி செய்கிறார்கள். இது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். இன்றைக்கு நாம் பார்க்கும் பொழுது சம்பந்தப்பட்டவர்கள் வசனத்தைப் போதுமானது என்று எண்ணவுமாட்டார்கள், பிறரும் வசனத்தின்படி வாழ விடமாட்டார்கள். எப்போதும் சந்தேகத்துடனேயே வாழ்ந்து ஒரு பூரண கிறிஸ்தவர்களாக இராமல் இருப்பார்கள்.

பி ரி ய ம ா ன வ ர் க ளே ! இன்றைக்கு குடும்பங்களாகட்டும், சபையாகட்டும், சமுதாயமாகட்டும் ஒழுக்கத்தோடும், ஆவிக்குரிய விஷயங்களில் மேம்பட்டும் இருக்க வேண்டுமானால் அது பெண்கள் இயக்கங்களின் செயல்பாட்டினாலோ அல்லது அதிகாரம் வாய்ந்த பெண்களாலோ வராது. தேவ சித்தத்தை மதிக்கும் பெண்களால் அத்தகைய காரியங்களை ஆரம்பிக்க முடியும். செயல்பட வைக்க முடியும். எனவே, தேவன் மேல் பிரியம் வைத்து அவர் சொன்ன வார்த்தைகளை ஏற்று அதன்படி வாழ்வோம். தேவனுடைய வார்த்தைகளை மதிக்க கற்றுக்கொள்வோம். ஆமென்.

வாலிபர் பகுதி

# வாலிபனே உனக்காக!

**Bro. Benny Martin**

பிரியமானவர்களே! தேவன் நமக்காக மாபெரும் காரியங்களை வைத்திருந்தாலும் அநேக வாலிபர்கள் பிசாசு இந்த உலகத்தில் வைத்திருக்கும் அற்பமான காரியங்களைச் நாடிச் செல்கிறார்கள். நாம் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கும்போது உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று பார்க்கிறோம் (1 யோவான் 5:19). பிசாசானவன் வாலிபர்களை பணம், புகழ், கவர்ச்சி போன்ற வலைகளில் பிடித்து வைத்திருக்கிறான். சுவிசேஷம் என்னும் வலையை விரித்து தேவனுக்காக அநேகரைப் பிடிக்க வேண்டிய வாலிபர்கள் தாங்களே சாத்தானின் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். இது மிகவும் வேதனையான காரியம். பெரும்பாலான வாலிபர்கள் தங்கள் பெரும்பாலான நேரத்தை உலகப்பிரகாரமான காரியங்களில் செலவிடுகிறார்கள். நாம் (எபே. 5,16) வசனங்களில், "ஆன படியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போல் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள் " என்று வாசிக்கிறோம்.

இவ்வுலகிலேயே மிக விலையுயர்ந்த பொருள் நேரமாகத்தான் இருக்க முடியும். கிரேக்க தத்துவஞானியான சாக்ரடீஸ் சொல்லும் போது " ஒருவரிடம் இருக்கும் உடைமைகள் எல்லாவற்றிலும் சிறந்தது நேரம் தான் இருக்க முடியும். கிரேக்க தத்துவஞானியான சாக்ரடீஸ் சொல்லும் போது ஒருவரிடம் இருக்கும் உடைமைகள் எல்லாவற்றிலும் சிறந்தது நேரம் தான் என்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் பல தேவதாசர்கள் நேரம் அல்லது காலத்தின் தன்மைப் பற்றி சொல்லியிருக்கிறதை நாம் பார்க்க முடியும். பக்தனாகிய யோபு சொல்லும் போது என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது என்று சொல்கிறார் (யோபு 7:6). இவ்வசனத்தில் யோபு தன்னுடைய ஜீவிய நாட்களின் தன்மையைப் பற்றி விளக்குகிறார். யோபு சொல்வது முற்றிலும் சரியானதே இந்நாட்களில் நேரமானது ஒளி மற்றும் ஒலியை விட வேகமாகச் செல்கிறது. அந்த வேகத்தோடு ஈடுகட்ட முடியா விட்டால் நாம் மிகுந்த சிரமத்திற்குள்ளாவோம். இந்த சந்தர்ப்பத்தை சாத்தான் நன்றாக பயன்படுத்திக் கொண்டு, வாலிபர்களின் நேரத்தை அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டு வீணடித்து விடுகிறான். ஆனால், நாம் பிசாசுக்கு இடங்கொடுக்கக் கூடாது.

மத்தேயு நான்காம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது சாத்தான் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வலையில் சிக்கவைக்கப் பார்த்தான். ஆனால், அவன் வெற்றி பெற முடியவில்லை. சாத்தான் தேவனைப்போல் சர்வ ஞானியல்ல, அவனுக்கு எல்லாம் தெரியாது. அவன் நம் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பதால் நம் பலவீனங்களை அறிந்து கொள்கிறான் (யாக் 1:14-ல்) நாம் வாசிக்கும்போது அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் என்று பார்க்கிறோம். சாத்தான் நம்மைக் கூர்ந்து கவனித்து நாம் எதில் பலவீனமாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டு நம்மை தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறான். நம் இருதயத்தின் நினைவுகள் சாத்தானுக்குத் தெரியாது. நம் மனதுக்குள்ளேயே அவன் கிரியை செய்கிறான் என்ற கருத்துத் தவறானது. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு மாத்திரமே நம்முடைய இருதயத்தின் நினைவுகள் தெரியும்.

ஆனால், அதே நேரத்தில் சாத்தானுடைய வல்லமையை நாம் குறைவாக மதிப்பிட்டுவிடக்கூடாது. பேதுரு சொல்லும் போது, "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" என்கிறார் (1பேதுரு 5:8). ஆனால், 1 யோவான் 4:4-ல் உலகத்திலுக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் " என்று பார்க்கிறோம். எனவே, நம்மிலிருக்கிற தேவன் பிசாசை விடப் பெரியவராக இருப்பதால் பிசாசுக்கு நாம் எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் (யாக். 4:7). சரி, இப்போது தேவன் நமக்காக வைத்திருக்கும் மாபெரும் காரியங்களை கவனிப்போம்.

## I மாபெரும் சிலாக்கியம் வசனத்தைக் கேட்கும்படி

பிரியமானவர்களே, அநேகர் இந்த உலகத்தில் இன்றும் ஒரே ஒரு சுவிசேஷ பிரசங்கத்தைக்கூட கேட்டதில்லை. இவ்வுலகில் பல பணக்காரர்கள் பல காரியங்களை கேட்டிருக்கலாம், பார்த்திருக்கலாம். ஆனால், அவைகள் ஒன்றுமே சுவிசேஷப் பிரசங்கத்திற்கு ஈடாகாது. சுவிசேஷமாகிய தேவனுடைய வார்த்தையில் வல்லமையில் இருக்கிறது. அதில் ஜீவன் இருக்கிறது. எனவே தான், அது ஆத்துமாவை இரட்சிக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் நம்மை நாம் நிரப்பிக் கொள்ள வேண்டும். எனவேதான் நாம் தேவனு டைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லும் போது, " உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது " (சங். 119:125). இது மெய் தான். ஏனென்றால், இருள் சூழ்ந்த நம் வாழ்க்கைக்கு நல்ல பாதையை காட்டக்கூடிய வெளிச்சமாய் தேவனுடைய வசனம் இருக்கிறது. வாலிபராகிய நாம் நம் வழியை எதினால் சுத்தம் செய்ய முடியும்?

வேதவசனத்தின்படி நம்மை காத்துக் கொள்ளுகிறதினால் தானே! ஆனால், தேவனுடைய வசனத்தை நாம் தியானித்தால் மாத்திரம் போதாது. மாறாக, அதை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் தேவனிடத்திலிருந்து முழுமையான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும். இதைப் பற்றி யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது, "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் " என்று கூறுகிறார் (யாக்கோபு 1:22).

## II மாபெரும் வார்த்தைகள் - விசுவாசிக்கும்படி

பலவிதமான நெருக்கடிகளிலிருந்து தேவன் நம்மை விடுவித்த விதத்தை நினைத்துப்பாருங்கள். அதற்குக் கைமாறாக, தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அவரை விசுவாசிப்பதுதான். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று (எபிரெயர் 11:6-ல்) நாம் விசுவாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலா மென்று நினையாதிருப்பானாக. இந்த உலகத்தில் பலர் கென்னடி, காந்தி போன்றோர் அப்படிச் செய்தார்கள்; இப்படிச் செய்தார்கள் என்று அவர்களை நேரில் கண்டிராமல் வரலாற்றைப் படிப்பதன் மூலமாகவோ அல்லது மற்றவர்கள் சொல்லக்கேட்டோ நம்புவார்கள். ஆனால், தேவன் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார், இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார் என்பதை விசுவாசிக்க மறுப்பார்கள். பிரியமானவர்களே, நம் விசுவாச அளவிற்கேற்பத்தான் நம் ஆசீர்வாதத்தின் அளவும் இருக்கும். எனவே, நாம் தேவனிடத்தில் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும் என்று கேட்க வேண்டும்.

## III மாபெரும் தேவன் - நாம் ஆராதிக்கும்படி

நாம் ஆராதிக்கும் ஜீவனுள்ள தேவன் எவ்வளவு அருமை யானவர் என்பதை பல வேளைகளில் நாம் மறந்து போகிறோம். தேவன் நம் வாழ்வில் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணிப் பார்த்தால் நாம் அவரை எப்போதுமே துதிக்கத் தூண்டும். ஆனால், நாம் அவைகளை எண்ணிப்பார்ப்பதில்லை. தேவன் ஒரு நன்மையை செய்யும் போது, அந்த நேரத்தில் மாத்திரம் அதற்காக தேவனுக்கு ஒப்புக்கு நன்றி சொல்கிறோம். பின்பு மறந்து விடுகிறோம். தேவனுடைய அன்பின் ஆழம், உயரம், நீளம், அகலம் அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பியதால் விளங்குகிறது. இதில் தேவனுடைய அன்பு விளங்குகிறது (யோவான் 3:16). அவருடைய இரக்கம் விளங்குகிறது (எபேசியர் 2:4). அவருடைய கிருபை விளங்குகிறது (எபேசியர் 2:8). இப்படிப்பட்ட அருமையான தேவனை நாம் கொண்டிருப்பது மாபெரும் பாக்கியமாகும்.

சிறுவர் பகுதி

# சிறந்த நண்பன்

Bro. ABEL R. NAYAGAM

எனக்குப் பிரியமான சிறுதம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். கோடை விடுமுறை முடிந்து பள்ளி செல்லத் தொடங்கி விட்டீர்களா? இந்தப் புதிய கல்வி ஆண்டிலே புது நண்பர்கள் உங்களுக்கு கிடைத்தார்களா? சரி, இந்த மாதம் உங்களுக்கு புதிய நண்பர் ஒருவரை அறிமுகப்படுத்துகிறேன். அவரையும் உங்களுக்கு நண்பராக்கிக் கொள்ளுங்கள். யார் அவர்? என்று கேட்கிறீர்களா? தொடர்ந்து கீழே படியுங்கள்.

யோவான் 15:13-ல் " ஒருவன் தன் சிநேகிகதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத் திலுமில்லை " என்று வாசிக்கிறோம். அப்படியானால், யார் நமக்காக ஜீவனைக் கொடுத்தது? ஆம், இயேசு கிறிஸ்துதான். அவரைத் தான் நீங்கள் நண்பராக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**இந்தக் கல்வி ஆண்டிலே நீங்கள் இயேசுவை உங்கள் நண்பராக்கிக் கொள்ள வேண்டும். ஏன் தெரியுமா?**

✤ எபிரெயர் 13:8-ல் " இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் " என்று வாசிக்கிறோம். ஆம், உங்களுக்கு இருக்கும் நண்பர்கள் ஒருவேளை காலப்போக்கிலே மாறிவிடலாம். ஆனால், இயேசு மாறாதவர். எனவே, அவரை நண்பராக்கிக் கொண்டால் உங்களுக்கு அது மிகுந்த தைரியத்தையும், நம்பிக்கை யையும் கொடுக்கும்.

✤ எபிரெயர் 13:5-ல் " நான் உன்னை விட்டு விலகுவதில்லை; உன்னைக் கைவிடுவதில்லை " என்று வாசிக்கிறோம். நாம் அன்றாடம் பழகும் நண்பர்களைப் போல இல்லாமல், நம்மை ஒரு போதும் கைவிடாமல், நம்மை விட்டு விலகாமல், எந்நேரமும் நம்மோடிருக்கிறார். அப்படி ஒரு நண்பர் உங்களுக்கு வேண்டும் தானே?

✤ யோவான் 16:33ல் " ......திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் " என்று வாசிக்கிறோம். இயேசு என்ற நண்பரிடம் அனைத்து வல்லமையும் உள்ளது. அவரிடம் சகல அதிகாரமும் உள்ளது. அப்படிப்பட்ட ஒருவரால் தானே நம் தேவைகள்

அனைத்தையும் சந்திக்க முடியும்? உங்களுக்குத் தேவையான ஞானம், புத்தி, அறிவு போன்ற எல்லா உதவிகளையும் செய்ய வல்ல வராயிருக்கிறார்!!

சரி குழந்தைகளே! இந்த மாதத்திற்கான அறிவுரை இதுதான். உங்களுக்கு இருக்கும் நண்பர்களோடு இயேசுவையும் உங்களுக்கு சிறந்த நண்பராக்கிக் கொள்ளுங்கள். இந்தக் கல்வியாண்டை சிறப்பாக துவங்கி இருக்கிற நீங்கள் அதை வெற்றியோடு முடிக்க என்றும் மாறாத, உங்களோடு கூட இருந்து உங்களை கைவிடாத, உங்களுக்கு தேவையான உதவி எதுவாக இருந்தாலும் அதைச் செய்ய வல்லவரான இயேசுவை உற்ற துணையாக்கிக் கொள் ளுங்கள்!. அது எல்லா வகையிலும் உங்களுக்கு நன்மையாக இருக்கும்.

எனவே, இயேசுவை உங்கள் நண்பராக்கிக் கொண்டு இந்த கல்வியாண்டை வெற்றியாய் முடிக்க உங்களை நான் உற்சாகப் படுத்துகிறேன்.

## நாளும், நடப்பும்

1. கூடங்குளம் அணுமின் நிலையம் அதன் முழு உற்பத்தித் திறனை எட்டி சாதனை.
2. நாட்டின் 29 ஆவது மாநிலமாக தெலுங்கானா உதயம்.
3. விவசாயத்தின் உயிர் நாடியாக கருதப்படும் தென்மேற்கு பருவ மழை தொடங்கியது.
4. ஆப்கானிஸ்தானில் தமிழக பாதிரியார் தீவிரவாதிகளால் கட்டத்தப்பட்டார்.
5. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது தொடர் கதையாகி விட்டது.
6. IPL ஏழாவது சீசனில் மீண்டும் KKR கோப்பையை தட்டிச் சென்றது.

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

**Bro. J.H. James Rajakumar**

என் அன்பிற்கினிய திருமறை ஆசான் வாசகர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெரிதான நாமத்தில் வாழ்த்துகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நிழலும் நிஜமும் என்ற தலைப்பின் கீழே பழைய ஏற்பாடு அல்லது பழைய உடன் படிக்கையை விட கிறிஸ்துவின் மூலமாக உண்டாக்கப்பட்ட புதிய ஏற்பாடு, அதாவது புதிய உடன்படிக்கையே சிறந்தது. அதுவே, நாம் பரலோகத்திற்கு தேவனிடத்திற்கும் கிறிஸ்துவினிடத்திற்கும் செல்வதற்கு உகந்த வழியாயிருக்கிறது என்று பார்த்தோம். அநேக சகோதரர்கள், சகோதரிகள் அந்த கட்டுரையை உணர்ந்து படித்து என்னை நேரடியாகவும், போன் மூலமாகவும் உற்சாகப்படுத்தி யதற்காக அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது மீண்டும் உங்களை தொடர்பு கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தேவன் தந்திருக்கிறார் என்பதற்காக அவருக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கட்டுரைத் தொடருக்காக நாம் எடுத்துக் கொண்டிருக்கிற தலைப்பு : கிறிஸ்து என்னும் மார்க்கம்.

இந்த உலகத்தில் அநேக மதங்கள் இருக்கின்றன. அதில் ஒரு மதமாக கிறிஸ்தவத்தையும் மக்கள் சேர்த்துவிட்டார்கள் என்பதற்காக நான் மனவேதனையடைகிறேன். கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல. அது ஒரு மார்க்கம். பூமியிலே பிறக்கின்ற, வாழுகின்ற ஒவ்வொரு மனிதப் பிறவியும் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவர்கள் இந்த பூமிக்குரிய வாழ்க்கையை முடித்துக்கொண்டு செல்லும் போது பரலோம் சென்றடையத்தக்க தகுதியைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதற்காக பிதாவாகிய தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரரான இயேசு கிறிஸ்து மூலமாக உருவாக்கின மார்க்கமே அந்த மார்க்கம். அந்த மார்க்கத்தில் மனிதர் எவ்வாறு நடக்க வேண்டும் என்று நடந்து காட்டியதால், அதாவது வாழ்ந்து காட்டியதால் அந்த மார்க்கம் கிறிஸ்து வாழ்ந்த அல்லது நடந்த மார்க்க மாயிருக்கிறது. ஆகையால், இந்த கட்டுரைக்கு கிறிஸ்து என்னும் மார்க்கம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஆனால், இந்த உலகத்தில் மனிதர்களால் கிறிஸ்து ஒரு மதமாக்கப்பட்டிருக்கிறார். இன்றைக்கு கிறிஸ்தவ மதம் என்று மக்களால் சொல்லப்படுகின்ற அமைப்புகள் மதம் பிடித்தவைகளாக இருக்கின்றன. ஒரு யானைக்கு மதம் பிடித்தால் என்ன நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியே இன்றைக்கு கிறிஸ்தவ மதம் இருக்கிறது. மதம் பிடித்த யானை யார் சொல்லும் பேச்சையும் கேட்காது என்பதைப் போல கிறிஸ்தவ மதத்தைப் பிடித்துக் கொண்டவர்கள் தேவனுடைய சத்திய வசனத்தை கேட்காதபடிக்கு தங்கள் இஷ்டமாக நடப்பதையே விரும்புகிறார்கள். அதினால் அநேகரை (ஆத்துமாவை) சாகடிக்கிறார்கள். இதைக் குறித்து கிறிஸ்துவானவர் லூக். 6:39ல் அவர்கள் பள்ளத்தில் விழுவதுமல்லாமல் அநேகரையும் பள்ளத்திலே விழ வைக்கிறார்கள் என்று சொல்லுகிறார். இதில் பரிதாபம் என்னவென்றால் பள்ளம் (கள்ளப் போதனை) இருப்பது உணர்த்தப் பட்டும் பிடிவாதமாக அந்த வழியிலே சென்று விழுகிறார்கள் என்பது தான் வேதனையான விஷயமாயிருக்கிறது.

தேவன் தெளிவாக எல்லா காரியங்களையும் அந்தந்த கால கட்டங்களிலே நேர்த்தியாய் செய்கிறவராயிருக்கிறார். பிரசங்கி 3:11. இந்தப் பிரசங்கியாரின் புத்தகத்தில் மனிதனால் தேவனுடைய செயல்களை மனிதன் கண்டுபிடியான் என்று சாலமோன் ஞானி தெரிவிக்கிறார். ஆனால், சாலேமோன் ஞானியைவிடப் பெரியவ ராகிய கிறிஸ்து தேவனுடைய வழிகளை செய்கைகளை நமக்கு ஒளித்து வைக்காமல் வெளிப்படுத்தியிருக்கிறார் (யோவான் 15:15).

இப்படி மனிதர்கள் மேல் கொண்டுள்ள தேவனுடைய எண்ணங்களையும், சித்தத்தையும், சத்தியத்தையும் முழுமையாக வெளிப்படுத்தி, அவரிடம் செல்வதற்கு ஒரு வழியை ஆயத்தப் படுத்த தம்முடைய குமாரனை தேவன் இந்த உலகத்தில் அனுப்பினார். (யோவான் 3:15,17).

கிறிஸ்து நடந்த வழியிலே நாமும் நடந்து அந்த மார்க்கத்தின் வழியாய் தேவனிடம் சேருவது என்பது இந்த காலத்தின் தேவனு டைய சித்தமாயிருக்கிறது. (யோவான் 14:6) கிறிஸ்து என்னும் வழி அல்லது மார்க்கத்தின் வழியாக சென்றால் மட்டுமே பிதாவினிடம் சேர முடியும். வேறுவழியாக சென்றால் பிதாவினிடம் சென்று அடைய முடியாது என்பதையும் இந்த வசனம் தெளிவுப்படுத்துகிறது.

கிறிஸ்துதான் இந்த இரட்சிப்பின் பரலோக மார்க்கத்தை உண்டாக்குவார் என்கிற திட்டத்தை தேவன் அநாதி தீர்மானமாக கொண்டிருந்தார். " தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு வுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே" (எபேசி. 3:9). அநாதி தீர்மானம் என்றால் காலங்கள் உருவாகு முன்பே இந்த திட்டத்தை தேவன் அநாதி தீர்மானமாகக் கொண்டிருந்தார்.

இன்னொரு வசனத்தில் கிறிஸ்து உலகத் தோற்றத்திற்கு முன்பே இந்த திட்டத்திற்காக குறிக்கப்பட்டார் என்று கூறுகிறது. "அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார் என்று 1பேதுரு 1:20ல் தெளிவாக பரிசுத்த ஆவியானவரால் உரைக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப் போதித்துக் கொண்டிருக்கையில் ஒருவர் கேட்டார் மனிதனை தேவன் படைப்பார் என்பதும், அவன் பாவம் செய்வான் என்பதும் தேவனுக்கு உலகத்தை உண்டாக்குவதற்கு முன்பே தெரிந்திருந்தது. அப்படியானால், அவர் ஏன் பூமியை உண்டாக்க வேண்டும்? அவர் ஏன் மனிதனைப் படைக்க வேண்டும்? அவனுக்காக ஒரு பெண்ணை உருவாக்க வேண்டும்? பாவம் ஏன் உலகத்தில் வரவேண்டும்? அதை ஏன் அவர் சரி செய்ய வேண்டும்? என்று அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்டார். அவருடைய கேள்விகளையெல்லாம் கேட்டு முடித்த பிறகு நாங்கள் கேட்டோம். ராக்கெட் ஏன் செய்யப்படுகிறது. ஆனால், ஒருவேளை பழுதடைந்தால் அதை சரி செய்யவும் அதிலே சாதனங்கள் பொருத்தப்படுகிறது. இந்த உலகம் கெட்டுப் போவதற்கு தேவன் உலகத்தையும், மனிதனையும் படைக்கவில்லை. மனிதனை செம்மையானவனாகப் படைத்து அவனுக்காக எல்லாவற்றையும் உருவாக்கினார். (பிரசங்கி 7:29). ஆனால், மனிதன் தான் பேராசையினாலே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டான். அதை சரிசெய்வது தேவனுடைய வேலையாக ஆயிற்று. தொடர்ந்து நாம் அடுத்த மாதம் கிறிஸ்து என்னும் மார்க்கத்தில் நடப்போம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## கலாத்தியர் நிருபத்தில் ஆவிக்குரியவன்

1. ஆவிக்குரியவன் விழுந்து போனவர்களை சீர்பொருந்தப் பண்ணுகிறான் [6:1].
2. ஆவிக்குரியவன் மற்றவர்கள் தங்கள் பாரத்தை சுமக்க மகிழ்ச்சியாக உதவி செய்கிறான் [6:2].
3. ஆவிக்குரியவன் தன்னை ஒருபோதும் ஒரு பொருட்டென்று எண்ணாமலிருக்கிறான் [6:3].
4. ஆவிக்குரியவன் தன் ஆவிக்குரிய கடமைகளுக்கு தானே பொறுப்பேற்கிறான் [6:5].

## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம் - 41 சபையின் மதிப்பு

Bro. K. பாஸ்கர்

வசன ரீதியான கிறிஸ்துவின் சபையைக் குறித்து படித்து வருகிறோம். தொடர்ந்து இம்மாதத்திலும் இந்தத் தொடர் கட்டுரையில் சபையின் மதிப்பைக் குறித்து நாம் அறிந்து கொண்டு அதற்குரிய மதிப்பை நாம் கொடுத்து வசனரீதியாக செயல்படும் கிறிஸ்துவின் சபைக்கு நாம் செல்வோமாக! இந்த விசயத்தில் தேவன் உங்களுக்கு தைரியத்தைக் கொடுப்பாராக!

### I சபையின் மதிப்பு குறித்து கிறிஸ்துவின் உவமை

கிறிஸ்துவின் சபையின் மதிப்பு குறித்து கிறிஸ்தவ உலகில் பல்வேறு எண்ணம் கொண்டிருக்கின்றனர். சிலர் அதன் கட்டிடம், அதன் மக்கள், அதன் பொருளாதாரம் போன்ற விசயங்களைக் கொண்டு மதிப்பிடுகின்றனர். சிலர் வசனத்தின் அடிப்படையில் மதிப்படுகின்றனர். நாம் வசனத்தின் அடிப்படையில் அதன் மதிப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். அநேகர் வசனத்தின் மகிமை உணராமல் மக்களைக் கொண்டும், அதன் பொருளாதாரத்தைக் கொண்டும் மதிப்பிடுகின்றனர். மேலும், அதன் கட்டிடத்தின் தேரணையைக் கொண்டு மதிப்பிடுகின்றனர். நம்முடைய ஆண்டவர் எருசலேமில் இருந்தபோது அதன் செல்வாக்கு, மிகவும் பிரபலமாயிருந்த அதன் தேவாலயம் போன்றவற்றை அறிந்திருந்தார். அவருடைய சீஷர்கள் கூட எருசேலமிருந்த தேவாலயத்தைப் பார்த்து பிரமித்து இவ்விதமாகச் சொன்னார்கள். போதகரே இதோ இந்த கல்லுகள் எப்படிப்பட்டது! இந்தக் கட்டிடங்கள் எப்படிப்பட்டது! பாரும் என்றார்கள். அதற்கு ஆண்டவர் இந்த பெரிய கட்டிடங்களை காண்கிறீர்களே ஒரு கல்லின்மேல் கல்லிறாதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் என்றார் (மாற்கு 13:1,2). ஆனால், தமது சபையைக் குறித்து சொல்லும் பொழுது, அது என்றும் அழிவதில்லை என்று சொல்லுகிறார் (மத். 16:18). ஆனால், இன்றுள்ள மனிதர்களோ சரீரப்பிரகாரமான கட்டிடங்களைப் பார்த்து பிரமித்து பெருமையாக பேசிக் கொள்கின்றனர். ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய கட்டிடங்களை பெருமையாக எண்ணுகிறார். ஆவிக்குரிய கட்டிடமே விலையேறப்பெற்ற கற்களாகவும் (1பேதுரு 2:5) ஆவிக்குரிய மாளிகையாகவும் (எபேசியர் 2:21) இருக்கிறது, அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாக இருக்கின்றார் (எபேசி. 2:20).

சபையின் மதிப்புக் குறித்து ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறும் உவமையானது; அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். மேலும், பரலோகராஜ்யம், நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான் (மத்தேயு 13:44,46). பரலோக ராஜ்யம் என்பது சபைதான். ஆகவே, நாம் குழம்பவேண்டியதில்லை. ஆக சபையானது நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம், நல்ல முத்தைத் தேடுகிற வியாபாரியை இவைகளுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். ஆனால், மனிதர்களுக்கோ இது தெரிவதில்லை. விலையேறப் பெற்ற கற்கள் என்பது இரட்சிக்கப்படுகின்ற ஆத்துமாக்கள். ஆனால், மனிதர்களுக்கோ இது தெரிவதில்லை. நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம் எப்படி அநேகருக்குத் தெரிவதில்லையோ அதுபோல சபையும் அநேகருக்குத் தெரிவதில்லை. அந்த நல்ல முத்தைத் தேடுகிற வியாபாரியைப் போல நாம் தேட வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றனர். இந்த உலகமானது மாயையிலும், செல்வத்திலும் மனிதனின் பலவிதமான பெருமைகளிலும் இருக்கின்றது. அதனால் அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் என்பவர்கள் அஸ்திபாரகற்களாக இருக்கிறார்கள் என்றும் அதற்கு இயேசு கிறிஸ்து மூலைக்கல்லாக இருக்கிறார் என்றும் அறியாமல் உள்ளனர் (எபேசியர் 2:20).

## I சபையின் மதிப்பு குறித்து தியாகம் செய்ய வேண்டும்

உலகில் காணப்படுகின்றன எல்லா சபைகளும் கிறிஸ்துவின் சபையாக இருக்காது. ஆகவே, நாம் அதைத் தேட வேண்டும், அதற்காக தியாகம் செய்ய வேண்டும். ஏற்கனவே பல சபைகளில் பொருளாளராகவோ, செயலாளராகவோ, ரெவரண்ட் ஆகவோ அல்லது கமிட்டி உறுப்பினர் களாகவோ இருக்கலாம். கிறிஸ்துவின் சபையைக் குறித்து அறிந்த வுடன் நாம் அந்தப் பட்டங்களை தியாகம் செய்ய வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறும்பொழுது அந்தப் பட்டங்களை தியாகம் செய்ய வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறும் பொழுது அந்தப் பொக்கிஷத்தைக் கண்டவுடன் எல்லாவற்றையும் விற்று விட்டு அந்தப் பொக்கிஷத்தை வாங்கினான். அந்த நல்ல முத்தைத் தேடுகிற வியாபாரியும் அதைக் கண்டவுடன் எல்லா முத்துக்களையும் விற்றுவிட்டு அதைக் கொள்ளுகிறான் என்றார் (மத். 13:44,46). மேலும், அவர் கூறும்பொழுது ஒருவன் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைதான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு வரவேண்டும் என்றார் (லூக்கா 9:23). கிறிஸ்தவ மார்க்கம்

பணத்தினாலோ, புகழினாலோ, வீண் பெருமையினாலோ உண்டானது அல்ல அது தியாகத்தின் அடிப்படையில் உண்டாயிருக்கிறது. சபைக்காக நாம் தியாகம் செய்ய வேண்டும்.

**III சபையின் மதிப்புக்குறித்து சந்தோஷம் இருக்க வேண்டும்**

இந்த உவமையில் வரும் மனிதர் நிலத்தில் புதைந்திருந்த பொக்கிஷத்தைக் கண்டு மறைத்து அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். பொதுவாக சொத்து விற்கப்படும் பொழுது எல்லாருக்கும் துக்கம் ஏற்படும். இது இயற்கையே! ஆனால், இந்த மனிதருக்கோ தன் உடைமைகளை விற்கையில் சந்தோஷம் ஏற்படுகிறது.

இன்று அநேகர் கிறிஸ்துவிற்காக கிறிஸ்துவின் சபையைக் குறித்து வேலை, சம்பளம், சுகம், பணம், பொருள், தாம் பணிபுரிந்த இடம் இவைகளைக் குறித்து வருத்தம் ஏற்படுகிறது. ஆனால், அப்போஸ்தலராகிய பவுலைப் பாருங்கள். அவர் எல்லாவற்றையும் விட்டு குப்பையுமாக எண்ணுகிறார். கிறிஸ்துவின் சபையில் இருப்பதற்காக சந்தோஷமாக எண்ணுகிறார் (கொலோ. 1:13), இரட்சிக்கப்பட்ட அனைவரும் பவுலைப் போல கிறிஸ்துவின் சபையைக் குறித்து சந்தோஷமாக எண்ணினார்கள் (அப். 2:41-47). நாமும் பவுலைப் போல எல்லாவற்றையும் விட்டு சந்தோஷமாக எண்ண வேண்டும். கிறிஸ்துவின் சபையைக் குறித்து தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

(தொடரும்)

## ஊழியத்தில் நாம் ஈடுபடுவதற்கான காரணங்கள்

1. தேவன் நமக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கும்படியாக
2. தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படியாக
3. இழந்த போனவர்களைக் குறித்து பரிதாபப்படும்படியாக
4. இவ்வுலகத்தை சிறந்த இடமாக மாற்றும்படியாக
5. கிறிஸ்துவினிடத்தில் ஆத்துமாக்களைக் கொண்டு வரும் போது பரலோகத்தில் மகிழ்ச்சி உண்டாகும்படியாக

# கிறிஸ்துவின் சபை ஆராதனையில் நீங்கள் கலந்து கொள்ளச் செல்லும் போது ஏதை எதிர்பார்க்கலாம்.

❖ நீங்கள் எங்கள் இடத்திற்கு வரும்போது, எங்கள் மரியாதைக்குரிய விருந்தினர்களாக நீங்கள் இருப்பீர்கள். நாங்கள் உபதேச காரியங்களில் உங்களிலிருந்து வேறு பட்டாலும், உங்களிடம் அன்பாக, மரியாதையாக நடந்து கொள்ள முயற்சிப்போம்.

❖ எங்கள் ஆராதனை மிக எளிமையானது. வருகிறவர்கள் எல்லோருமே அந்த ஆராதனையில் பங்கெடுக்க முடியும். எங்கள் இசை எளிய பாடல்களை உள்ளடக்கியது, பாடல்களைப் பாடும் படியாக ஒவ்வொருவருக்கும் அழைப்புண்டு. நாங்கள் வாரந் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம். எங்கள் ஜெபங்கள் எல்லாம் தேவனிடத்தில் ஏறெடுக்கப்படும் ஊக்கமான வேண்டுகோளாயிருக்கிறது. பிரசங்கம் எல்லாம் கிறிஸ்துவையும், வேத வசனங்களையும் மையமாகக் கொண்டா லும் கூடி வந்திருக்கிறவர்களுக்குப் போதிக்கத்தக்கதாகவும், அவர்களை மேம்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப் பட்டுள்ளது. ஆராதனைக்கு வருகை தருபவர்கள் பணத்தை நன்கொடையாகக் கொடுக்க வேண்டியதில்லை.

❖ ஆராதனை முறைகள் உங்களைச் சங்கடப்படுத்தும் வகையில் திட்டமிடப்படாமல், தேவனைத் துதிக்கும் விதமாகவும், வருகின்ற எல்லோருக்கும் வேதாகமத்தைப் போதிக்கும் விதமாகவும் அமைந்திருக்கும். *தயவு செய்து எங்களோடு தேவனை ஆராதிக்கக் கலந்து கொள்ளுங்கள்.*

# ஆவிக்குரிய தன்மையோடு விளக்குதல்

*Clarence De Loach, Jr.*

> சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருந்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு (கலா. 6:11).

ஆவிக்குரிய தன்மை என்று குறிப்பிடப்படும் போது உங்கள் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றுகிறது? ஆமென் என்று சொல்வதா? சத்தமாகப் பாடுவதா? நீண்ட ஜெபங்களா? ஓர் நல்ல உணர்வா?

உண்மை என்னவென்றால், ஆவிக்குரிய தன்மையைப் பற்றி மனங்கள் குழப்பமடைந்திருக்கின்றன. பலர் இது உணர்வுகளை அடிப்படையாக வைத்து அமைகிறது என்று விளக்கம் கொடுக்கிறார்கள்.

**பவுல் மூன்று வகையான மக்களைப் பற்றி விவரிக்கிறார்**

1. **ஜென்ம சுபாவமான மனிதன் (1 கொரி. 2:14)** இவன் ஜென்ம சுபாவமான மனிதனுக்குரிய புரிந்து கொள்ளுதலோடு இருக்கிறான்.
2. **மாம்சத்துக்குரிய மனிதன் (1 கொரி. 3:1,2)** இவன் ஜென்ம சுபாவமான மனிதனைப் போல நடந்து கொள்ளுகிற கிறிஸ்தவனாயிருக்கிறான்.
3. **ஆவிக்குரிய மனிதன் (ரோமர் 8:2)** இவன் ஆவிக்குரிய காரியங்களில் அக்கறை கொண்டு அதன்படி நடக்கிறான்.

கலாத்தியருக்குப் பவுல் ஆவிக்குரிய தன்மையின் மனநிலைகளையும், செயல்பாடுகளையும் அடிப்படையாக வைத்து அமைகிறது என்று விளக்கமளிக்கிறார். அந்த மனநிலைகள் தான் ஆவியின் கனி என்று. ஒன்பது கனிகள் பட்டியலிடப்பட்டிருக்கிறது (கலா. 5:22, 23). ஒருவருடைய வாழ்க்கையில் உள்ள ஆவி சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றில் வெளிப்படுத்தப்படும். இதே வசனப்பகுதியில் ஆவிக்குரிய ஒன்பது செயல்பாடுகள் விளக்கப்பட்டிருக்கிறது (கலா. 6:1).

1. **அவர் விழுந்துபோன சகோதரனையோ அல்லது சகோதரி யையோ சீர்பொருந்தப் பண்ணுவார்.** அதை அகந்தையோடு அல்ல, சாந்தத்தோடு அவர் செய்கிறார். **வழிதப்பிப்போன ஒரு சகோதரனை சீர்பொருந்தப் பண்ணுவதற்கு எப்போதாவது முயற்சி எடுத்திருக்கிறீர்களா?**

2. **அவர் மற்றவர்களுடைய பாரத்தை சுமப்பார் (வசனம் 2)**

   பல வகையான பாரங்கள் உண்டு. நாம் அவைகளைக் கவனித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். **ஒரு சகோதரன் தன் பாரத்தை சுமக்க நீங்கள் உதவி செய்திருக்கிறீர்களா?**

3. **அவர் தன்னைக் குறித்து உயர்வாக எண்ணமாட்டார் (வசனம் 3)**

   அவர் தன்னுடைய பலத்தைக் குறித்து வஞ்சிக்கப்படமாட்டார். பெருமை ஆவிக்குரிய தன்மையோடு ஒத்துப்போவதில்லை. **நீங்கள் தாழ்மையாக இருக்கிறீர்களா?**

4. **அவர் தேவனுக்கான பங்களிப்பில் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் இருப்பார் (4)**

   அவர் தன்னுடைய வாழ்க்கையை சோதித்துப் பார்த்து, தன்னுடைய குறைகளைச் சரி செய்துவிட்டு, பின்பு பிறரை விமர்சனம் செய்வார். **நீங்கள் உங்கள் குறைகள் கொண்ட பட்டியலை இன்று தயாரித்து விட்டீர்களா?**

5. **அவர் தன்னுடைய செயல்பாடுகளுக்குத்தானே பொறுப் பேற்றுக் கொள்வார் (வசனம் 5)**

   அவர் மற்றவர்களைக் குற்றப்படுத்துவதில்லை. அவர் தான் செய்ய வேண்டிய வீடு சந்திப்புகளை, ஆத்தும ஆதாயத்தை, ஊழியத்தைப் பிறர் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கமாட்டார். **உங்கள் தனிப்பட்ட பொறுப்பை உணர்கிறீர்களா?.**

6. **அவர் தனக்கு சத்தியத்தைக் கொண்டு வருபவரை சந்தோஷமாகத் தாங்குவார் (வசனம் 6)**

   மூத்த மேய்ப்பர்கள் உயர்வாக மதிக்கப்படுகிறார்கள். திருவசனத்தைப் போதிப்பவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் உளவியல் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் தாங்கப்படுகிறார்கள். அவர் உலகமுழுவதும் சுவிசேஷம் பரவ உதவி செய்வதற்கு மனங்கசந்து கொள்வதில்லை. **கர்த்தருக்குள் உங்களுக்கு போதித்தவர்களிடத்தில் உங்கள் பாராட்டை வெளிப் படுத்தியிருக்கிறீர்களா?**

7. **அவர் விதைத்தல் மற்றும் அறுத்தலுக்கான விதியைப் புரிந்து கொள்கிறார் (வசனம் 7)** தேவன் சேவைக்கு அதே விதமாகவே பலனளிக்கிறார். ஆவிக்கென்று விதைப்பது ஜீவனைக் கொண்டு வரும். **நீங்கள் ஆவிக்கென்று விதைக் கிறீர்களா?**

8. **அவர் விடாமுயற்சி உடையவர் (வசனம் 9).** அவர் அவ்வப்போது முயற்சி எடுப்பவருமல்ல, அனலுமில்லாத, குளிருமில்லாத ஒரு நபரும் அல்ல. ஆனால், விடாமுயற்சி உடையவர்! அடிக்கும் காற்றுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவருமல்ல. நீங்கள் **உறுதிப்பட்டவர்களாயிருக் கிறீர்களா?**

9. **அவர் நன்மை செய்வதற்கான வாய்ப்புகளைப் பற்றிக் கொள்கிறார் (வசனம் 10)**

   அவர் எல்லோருக்கும் நன்மை செய்கிறார் நீதிமான்களுக்கும், துன்மார்க்கருக்கும்; இரட்சிக்கப்பட்டவர்களுக்கும், இரட்சிக்கப் படாதவர்களுக்கும் நன்மை செய்கிறார். மற்றவர்களிடத்தில் அவர் காட்டும் அன்பு இருதயங்களில் சத்தியம் போய்ச் சேர வழியைத் திறந்து விடுகிறது. **பிறருக்கு நீங்கள் நன்மை செய்கிறீர்களா?**

இருதயத்திலுள்ள ஆவியின் மனப்பான்மைகள், வாழ்க்கையில் ஆவியின் செயல்பாடுகளில் வெளிப்படுத்தப்படும். இப்போது, ஆவிக்குரிய தன்மையை நன்றாகப் புரிந்து கொண்டீர்களா?

## இரட்சிப்பு

1. இரட்சிப்பு தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டது (ரோமர் 10:17)
2. இரட்சிப்பு என்பது தேவனிடத்திலிருந்து நமக்கு இலவசமாக கிடைக்கும் ஈவாகும் (ரோமர் 5:8)
3. இரட்சிப்பு என்பது இயேசுவின் விலைமதிப்பற்ற இரத்தத்தினால் நமக்கு சாத்தியமாயிற்று (1 பேதுரு 1:18,19)
4. இரட்சிப்பு சபையாகிய ஆவிக்குரிய குடும்பத்தில் ஒருவரைச் சேர்க்கிறது (அப். 2:47).

# மூப்பர்களாக, உதவிக்காரர்களாக பெண்கள்

*Jimmy Jividen*

" நம் கலாச்சாரத்தில் பெண்களின் பங்கு மாறிக் கொண்டே இருக்கிறது. பெண்ணின் பணி வீட்டு வேலைகளோடு முடங்கி விடுவதில்லை. வேலை ஸ்தலத்தில், வியாபாரத்தில், நிதி சம்மந்தமான காரியங்களில், கல்வியில், அரசாங்கத்தில் தன்னுடைய நிலையை உறுதிப்படுத்தி விட்டாள். சபையில் அவள் மூப்பராக அல்லது உதவிக்காரராக இருப்பதை ஒருவர் ஏன் தடுக்க வேண்டும்?


புதிய ஏற்பாடு மூப்பர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் உரிய தகுதி அம்சங்களைப் பற்றி சொல்லியிருக்கிறது I தீமோத்தேயு 3. கண்காணிகளும் (மூப்பர்களும்) உதவிக்காரரும் ஒரே மனைவியை உடைய புருஷனாக இருக்க வேண்டும். இந்த தகுதி பெண்களை, திருமணம் ஆகாதவர்களை இத்தகைய தலைமைத்துவ பங்குகளில் சேவை செய்ய தகுதியிழக்க செய்கிறது. பொதுவான முறையில் உதவிக்கார் என்று மொழியாக்கம் செய்யப்பட்டி ருக்கிற இந்த மதம் ரோமர் 16:1ல் ஸ்திரீ யாகிய பெயேயானைக் குறிக்கிறது. பொதுவான பதம் புதிய ஏற்பாட்டில் அரசாங்க வேலைக்காரர்களுக்கும், அடிமைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் I தீமோத் 3 ஆம் அதிகாரம் சபையில் விசேஷித்த வேலைக்கார்களாக இருக்கும் உதவிக்காரர்களைப் பற்றித் தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விசேஷித்த விதத்தில் அவர்கள் ஆண்களாக இருக்க வேண்டும்.

தேவன் மனுஷனிடமிருந்து மனுஷனுக்காக மனுஷியைப் படைத்தார் (I கொரி 11: 8,9). வேத வசனங்கள் பெண்கள் சபையில் அமைதியாயிருக்க வேண்டும் என்று போதிக்கிறது. இந்த போதனையை முதல் நூற்றாண்டு வெறும் கலாச்சாரம் என்று சொல்லி ஒன்றுமில்லாமல் போகச் செய்யும் முயற்சிகள் வேத வசனத்தை மேஜையில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பதார்த்தங்களில் நமக்கு வேண்டியவற்றை எடுத்து விட்டு வேண்டாதவைகளை விட்டு விடுவது போல மத சம்மந்தமாக ஆக்கிவிடும்.

பெண்ணுக்கு ஏற்கனவே உலகில் செல்வாக்குமிக்க பங்கு இருக்கிறது. I தீமோ 5:14ல் பெண் மூல பாஷையாகிய கிரேக்கத்தில் வீட்டை ஆளுகிறவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இல்லத்தரசியாகவும், தாயாகவும் இருக் கிற பெண்ணுக்கு மகிமையான தலைமைப் பங்கு உள்ளது.


கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபையில் முதன்மையாயிருப்பதற்கு ஒருவருக்கு மதசம்மந்தமான தலைப்போ, பட்டமோ தேவை இல்லை. இயேசு தாமே இவ்விதமாகச் சொன்னார். " உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் " (மத். 20:27).

12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.






















**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**

# எங்களது இதர வெளியீடுகள்





சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட


**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்





## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.